Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-1**

Name : திரு.சிவக்கொழுந்து
Father / Husband name : ஆறுமுகம்
Village : கோட்டக்குப்பம்
Age : 41
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 20.02.2026

A1, A2 present. Defence counsel present. HC 1465 present.

**சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தன்று பணியிலிருந்ததற்கு பாஸ்போட் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவத்தின்போது நான் இருச்சக்கர வாகனத்தில் வந்தேன் என்றால் சரிதான். என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை. நான் ஓட்டிவந்த இருச்சக்கரவாகனத்தை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மாலை 05.45 மணிக்கு நடந்தது. சம்பவயிடம் கலால் காவல் நிலைய தெருவில் நடந்ததா அல்லது வடஆலப்பாக்கம் ரோட்டில் நடந்ததா என்றால் இரண்டு ரோட்டிற்கும் இடையே உள்ள வளைவில் சம்பவம் நடந்தது. காவல் நிலைய ரோட்டில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. கலால் காவல் நிலைய தெரு மற்றும் வடஆலப்பாக்கம் ரோடு சி வடிவில் உள்ளதா என்றால் ஆமாம்.

2. சம்பவயிடத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது, எவ்வளவு தூரம் என்றால் 20 நிமிடம் ஆனது, சுமார் 5 கிமீ தூரம் இருக்கும். எவ்வளவு நேரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சுமார் கால் மணிநேரம் இருக்கும். மருத்துவமனையிலிருந்து திண்டிவனம் நகர காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 5 கி.மீ இருக்கம், சுமார் கால் மணிநேரம் இருக்கும். அ.சா. 2,

அ.சா.3 ஆகியோர் சம்பவயிடத்திலிருந்து மருத்துமவனைக்கும், காவல் நிலையத்திற்கும் அழைத்துச்சென்றார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் 6 மணிக்கு கொடுத்தேன். அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அன்றையதினம் பணியிலிருந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா.2 அன்றையதினம் காவல் நிலைய பாராவில் இருந்தார் என்றால் நினைவில்லை. அ.சா.3 அன்றையதினம் காவல் நிலைய பொறுப்பில் இருந்தார் என்றால் இல்லை, மதுவிலக்கு பிரிவில் பணியிலிருந்தார். காவல் நிலையத்திற்கு நிலைய பொறுப்பு அதிகாரி இருப்பார்கள் என்றால் சரிதான்.

3. அன்றையதினம் எங்கள் காவல் நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் ஆய்வாளர் ராதிகா. சம்பவ சமயத்தில் நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் ஆய்வாளர் விடுப்பில் இருந்ததால் உதவி ஆய்வாளர் ஆனந்தன் நிலைய பொறுப்பில் இருந்தர். அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் சீருடையில் இல்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எனக்கும் முன்விரோதம் இல்லை, சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை எனக்கு தெரியாது, சம்பவ சமயத்தில் இருச்சக்கர வாகனத்தில் மோதும் போது தான் பிரச்சனை என்றால் சரிதான், எனது வாகனத்தில் முந்தும்போது தான் பிரச்சனை. புகாரில் அ.சா.2, அ.சா.3 சம்பவம் குறித்து தகவல் தெரிந்து வந்தார்கள் என உள்ளது என்றால் சரிதான். வடஆலப்பாக்கம் ரோடு குடியிருப்புகள் உள்ளது, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். இருவருக்கும் இடையே வாக்குவாதத்தின்போது கும்பல் இருந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்து தான் 14வது காலத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

4. முதல் தகவல் அறிக்கையில 12வது காலத்தில் 13.06.2021 அன்று சம்பவம் நடந்ததாக உள்ளது என்றால் சரிதான் 14.06.2021 அன்று தான் சம்பவம் நடந்தது. 2வது எதிரி எவ்வளவு நேரம் கழித்து சம்பவயிடம் வந்தார் என்றால் சுமார் 2 -

5 நிமிடத்தில் வந்துவிட்டார். அ.சா.2 சீருடையில் இருந்தாரா என்றால் இல்லை, மதுவிலக்குபிரிவில் இருப்பதால் சீருடை இல்லை. பாராவில் இருந்த காவலர்கள் சீருடையில் இல்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களும் சீருடையில் இல்லை என்று புகார் மற்றும் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் 3பேரும் போலிசார் என்றபோது எதிரிகள் துணிச்சலாக எங்களை தாக்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனக்கு பின்னால் பைக்கில் வந்தவர்கள் என்னை முந்தி சென்றபோது அதிகாரதோரனையில் நான் தான் பேசினேன் என்றால் சரியல்ல. அதனை கேட்ட 1வது எதிரியை நாங்கள் 3 பேரும் தாக்கிவிட்டோம் என்றால் சரியல்ல. பிரச்சனை அதிகமானதால் எதிரிகளை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றோம் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து 2வது எதிரி காவல் நிலையத்தில் கேட்டபோது அவரையும் காவல் நிலையத்தில் உட்கார வைத்து அவரையும் தாக்கிவிட்டோம் என்றால் சரியல்ல. எதிரிகளை வெளியில்விட்டால் எங்கள் மீது புகார் கொடுப்பார்கள் என்பதால் அவர்கள் மீது நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரை எங்கு எவ்வளவு நேரம் எழுதினேன் என்றால் காவல் நிலையத்தில் சுமார் 5 நிமிடத்தில் எழுதினேன். நான் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்து பொய், நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-2**

Name : முருகையா
Father / Husband name : அண்ணாதுரை
Village : திண்டிவனம்
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 20.02.2026

A1, A2 present. Defence counsel present. HC 1465 present.

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தன்று நான் என்ன பணியில் இருந்தேன் என்றால் நிலைய பாராவில் இருந்தேன். பாராவில் சீருடையில் இருந்தேன் என்றால் இல்லை, சிவில் உடையில் இருந்தேன். அ.சா.3 அன்றையதினம் பணியில் இருந்தாரா என்றால் இருந்தார், அவரும் சீருடையில் இல்லை. முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை உதவி ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதன். அ.சா.3 சம்பயிடத்திற்கு சென்றபிறகு நான் சென்றேன் என்றால் சரியல்ல, சத்தம் கேட்டு ஒன்றாக சென்றோம். சம்பவம் எப்போது நடந்தது என்றால் மாலை 5.45 மணிக்கு நடந்தது. எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சுமார் 10 நிமிடத்தில் சென்றோம். நான் திரும்பி வந்து பாரா பொறுப்பை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். இடைப்பட்ட நேரத்தில் பாராபொறுப்பை யார் பார்த்தது என்றால் காவல் நிலையத்திலிருந்த மற்ற காவலர்கள் பார்த்தார்கள். பாராபொறுப்பை மாற்ற யாரிடம் அனுமதி பெற்றேன் என்றால் உதவி ஆய்வாளர் ஆனந்தன் என்பவரின் வாய்மொழியாக கேட்டுவிட்டு சென்றேன். அ.சா.1 ம் நானும் சிவில் உடையில் இருச்சக்கர வாகனத்தில் வந்து திடீரென்று திரும்பி விபத்தை ஏற்படுத்த முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை மறைத்து எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம்

நடக்கவில்லை, எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-3**

Name : சிவக்குமார்
Father / Husband name : விநாயகம்
Village : கோட்டக்குப்பம்
Age : 50
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 20.02.2026

A1, A2 present. Defence counsel present. HC 1465 present.

**சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை உதவி ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னபடி தான் சம்பவம் நடந்ததா என்றால் சம்பவம் நடந்தபடி முதல் விசாரணையில் சொன்னேன். சம்பவ சமயத்தில் யார் நிலைய பொறுப்பு அதிகாரி என்றால் உதவி ஆய்வாளர் ஆனந்தன். அ.சா.1 வுடன் மருத்துமவனைக்கும், நகர காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் மருத்துவமனைக்கு சென்றேன், நகர காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. அ.சா.1, அ.சா.2 ம் இருச்சக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்றதை கேட்ட எதிரிகள் மீது நாங்கள் பொய்யான புகார் கொடுத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுப்பார்கள் என்று பயந்து அவர்கள் மீது பொய்யான வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.